# இந்துசாதனம்.


பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

ஸ்தாபிதம் (1889)

| பத்திரக் கிரயம். | |
|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ௵ 1-க்கு ரூ | 5-00 |
| இலங்கை, இந்தியா: " ரூ. | 8-00 |
| தொலைப்பகுதி: " ரூ | 9.00 |
| தனிப்பிரதி: | சதம் 5 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

## THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

| விளம்பர விகிதம். | |
|---|---|
| முதன்முறைக்கு:—ஒருகலம் | ரூ. 9-00 |
| " அரைக்கலம் | ரூ. 4-50 |
| " கார்க்கலம் | ரூ. 3-00 |

அடுத்த முறைகட்கு வேறு விகிதங்களிற் பாதி.

விளம்பரங்கள் முற்பண மனுப்பினுலன்றிக் கவனிக்கப்படா

புத்தகம்—௪௦. } யாழ்ப்பாணம்:—விபவ௵ புரட்டாதி௴ ௩௦௨, (1928 அக்டோபர் 15) திங்கட்கிழமை. { இலக்கம்—௩௦.


உ

கணபதிதுணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர்தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென்றேறு
மதம்பூத்தவிநாயகன்றுள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்க்கவே.

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போதுஇந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாறு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ, சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளப்பஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் நீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா உ௦. அரைருத்தலுக்கு ரூபா க௦. கால் ருத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன்மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கியசுகாதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு,
இலோன்.

(M. 30.)

## மூன்று அருமைவாய்ந்த நூல்கள்.

(1) **மறுபிறப்புத் தூஷண பரிகாரம்.**

இது கிறீஸ்தவர்களுக்கும் சைவர்களுக்குமிடையில் மறுபிறப்பு விஷயமாக நடந்ததருக்க முடிவு இதுவோர் அறிவு பயக்கும் நூல். —192 பக்கங்களையுடையது, விலைசதம் 50.

(2) **மறுபிறப்புத் தூஷண பரிகாரக் கிலிகோலபஞ்சனம்.**

இது கிறீஸ்துமதம் மறுபிறப்புக் கொள்கையுடையதோ அன்றோ? என்பதுபோன்ற பல அரிய விஷயங்களாக யாக்கோபுவுக்கும் ஞானசேகரனுக்குமிடையில் நிகழ்ந்த மேலான தருக்க முடிவு.
—57 பக்கங்களையுடையது. விலைசதம் 25.

(3) **கொலைமறுத்தல் பிரசினோத்தரம்.**
—விலைசதம் 5.

மேற்படி நூல்கள் விலைப்படும்
பிரதான இடங்கள்.

(1) சி. சு. இராஜையன், மணல்தறை ஒழுங்கை, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.
(2) S. S. சண்முகநாதன் புத்தகசாலை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
(3) சோதிடப்பிரகாச யந்திரசாலை, கொக்குவில், யாழ்ப்பாணம்.

(Q. 111.)

## யாழ்ப்பாணம்
## கீரிமலை மூர்த்திதல தீர்த்தமகிமை.

நகுலமுனியின் கீரிமுகத்தை மாற்றியதும், திசையுக்கிரசோழன் மகள் மாருதப்பிரவல்லியின் குன்மவலியையும் குதிரைமுகத்தையும் நீக்கியதும், அர்ச்சுனன் கனன் முதலிய அரசர்களும் வந்து தீர்த்தமாடும் பெரும்பேறுபெற்றதும் யாழ்ப்பாணத்தில மூர்த்திதலம் தீர்த்தம் ஒருங்கே யமையப்பெற்றதுமான இந்தக் கீரிமலைத் தலத்திற் பழைய கிணறு ஒன்றிலிருந்து எடுக்கப்பட்ட ஸ்ரீமந் நாராயணமூர்த்திக்குத் திருக்கோயிலமைத்து அதிற் பிரதிட்டைசெய்து பூசைநடந்து வருகின்றது. வேறு கிணற்றிலிருந்து எடுக்கப்பட்ட முருகமூர்த்திக்கு, அதன் பக்கத்தே ஒரு திருக்கோயிலையும், அதற்கு நேர்வடக்கில் வெள்ளைநூம் பன்னீர்மரமும் நிற்கின்றமலைச்சாரலில் சிவலிங்கப்பெருமானுக்கு ஸ்ரீ காசியில் எழுந்தருளியிருக்கும் விசுவநாதசுவாமிக்கு அர்ச்சிப்பதுபோல ஆசாரசீலர்கள் தாமே அர்ச்சிக்கத்தக்கதாக ஒருதிருக்கோயிலையும் அமைத்து அவைகளிலே வேறு மூர்த்திகளைப், பிரதிட்டைசெய்யவேண்டியிருத்தலினால் அடியார்கள் இச்சிவபுண்ணியத்தில் கலந்து தங்களாலியன்ற பொருளுதவி செய்து அருள்பெறுமாறு வேண்டுகின்றேன்.

க. த வடிவேலுமேஸ்திரி,
(Q. 113.) வசுவெட்டித்துறை

## விசேஷ இனும்.

உயர்ந்த மிலிடேரி காக்கிட்வில் ஷேர்ட் இரண்டு பக்கமும் மேல்மூடியுள்ள பாக்கட்டும் இரண்டு தோள்களில் ஷோல்டர் பட்டையும் உள்ளது ஒன்று ரூபா 2—8. மூன்று வாங்கினல் 1 படுக்கை மப்ளர் இனும் 6 வாங்கினல் ஒரு கம்பளிப் போர்வை இனாம்.

புதிய மாதிரி! விலைசரசம்!

16 முழம் இமிடேஷன் சரிகை.
தொட்டி காசிபுடவை!!

இனும்! இனும்!! இனும்!!!

இம்மாதிரியான அசல் தொட்டிப்புடவை சேலை ரூபா 100, 150, 200 போட்டால் தான் கிடைக்கும்.

எங்களுடை 22 காரட் ரோல்ட்கோல்ட் சுவுட்சர்லாந்தில் செய்யப்பட்ட அழகுவாய்ந்த திறமான 10 வருட உத்தரவாதமுள்ள



ரோல்ட் கோல்ட் ரிஸ்லெட் கடிகாரம். வாங்குபவர்களுக்கு வேறு காசிப்பு சேலை இனுமாக அனுப்பப்படும் சரியான மணி காட்டும் கடிகாரத்தின் விலை சொற்பமே. ஒரு கைப்பட்டையுடன் ரூபா 10—0—0 தான் தனியாகவாங்கினல் புடவை 1-க்கு ரூபா 5—8—0 ஒரேகாலத்தில் 6 புடவை வாங்கினல் ஒருபுடவை இதற்கு இனும் கொடுக்கப்படும்.

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

உடனே ஆர்டர் செய்யுங்கள்.

அசோகா அன் கோ,
வேப்பேரி போஸ்ட்,
சென்னைபட்டணம்

ASOKA & Co,
Vepery, P. O.,
Madras.

(Q 112)

## யாழ்ப்பாண
## ஐக்கியவியாபாரசங்கம்
## லிமிட்டெட்.

1918-ல் ஸ்தாபிக்கப்பட்டது.

பிறதேசங்களிலிருந்து
நெல்லு
அரிசி
மற்றுஞ் சாப்பாட்டுக்குரிய சகல சாமான்களும், பலவகையான சாய்ப்புச் சாமான்களும் வருவித்து விற்பவர்கள்.

இது யாழ்ப்பாணத்தவர்களால் நடத்தப்படும் பிரபலமான வர்த்தகம்.

சாமான்கள் திறமானவை.

விலை சகாயம்.

சுதேச முயற்சியைத் தைரியப்படுத்துங்கள்.

தங்கள் ஆதரவை எதிர்பார்க்கின்றோம்.

பெரிய கடையின் வடமேன் வீதிகளில் இக்கம்பெனிக் கடைகள் நடைபெறுகின்றன.

(Q. 108.)

## சுகம் சுறுக்காயும் நிச்சயமாயுங் கிடைக்கும்.

எவ்வித நோவாயிருந்தாலுஞ்சரி,
தலைவலி
நரம்புவலி
இல்வாய்வு
துடைப்பிடிப்பு
வாதம்
சுளுக்கு
தொண்டை நோ
நெஞ்சுச்சளி
எல்லாவற்றிற்கும்

## லிட்டில்ஸ் ஓரியென்டல் பாம்.

உடன் சுகந்தரும்.




43 வருடகாலமாய் அனுபோகத்தில் சிறந்த மருந்து என்று நிச்சயிக்கப்பட்டது. அது தரும் சுகத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அதின் விலை ஒரு பெரிதல்ல.

மிருக கொழுப்புச் சேராதது

எல்லா ஷாப்புகளிலுங் கிடைக்கும்.

(2—28) Little's Oriental Balmar and Phmaceuticals Ltd., Madras.

(Y. 51.)

## விற்பனவு விளம்பரம்.

—:o:—

யாழ்ப்பாண டிஸ்திரிக் கோட்டின் 6308-ம் இலக்கத் தத்துவ வழக்கில் கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் சாமான்கள் ௧௯௨௮௵ ஐப்பசி௴ 20-ம் தேதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிதொடக்கம் அந்தக் கோட்டில் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விபரம்.

1. ஒரு தாலியுங் கொடியும்
2. ஒரு பவுண் சங்கிலி
3. ஒரு சிறுசங்கிலி
4. ஒருசோடி பொன்காப்பு
5. ஒருசோடி தோடு
6. ஒரு கொண்டைப்பூ
7. ஒருபொன் கொண்டைக்கூர்
8. ஒருவெள்ளிக் கால்சங்கிலி
9. ஒரு பொன்மோதிரம்
10. ஐம்பதுபுசல் நெல்லு
11. பத்துப்புசல் வன்று
12. ஒரு கூறைச்சேலை
13. ஒரு பட்டுத்தாவணி
14. நாலு தாவணி
15. ஒரு அண்டா
16. ஒரு குத்துவிளக்கு
17. ஒரு தோல்பெட்டி
18. இரண்டு செம்பு.

வ. சரவணமுத்து,
கம்மிஷனர்.

யாழ்ப்பாணம்
டிஸ்திரிக்கோடு,
1928-ம்௵ புரட்டாதி௴ 21-ந் திகதி.

(Mir. 1309.)

## இலக்கம் 15.
## அரசாங்கவைத்திய
## சுகாதாரப்பகுதி வெளியீடு.

### மானிடரில் பெரும்பாலு மிருக்கும் கிருமிப பூச்சி.

சிறுபிள்ளைகளிலும் பராயமானவர்களிலும் பெரும்பாலு மிருக்கும் கிருமிகளிலொன்று நாக்குப் பூச்சி. இதைச் சாத்திரசம்பந்த முறையில் "அஸ்காரிய லும்பிரிக்கோயிட்ச (Ascaris lumbricoides) என்று சொல்லப்படுகிறது. இதனால் உண்டாகும்வியாதியை "அஸ்காரியாசிஸ்" (Ascariasis) என்று சொல்லப்படுகிறது. நாய்களிலும் பன்றிகளிலும் இதேவிதமான ஒர் நோய் இருக்கிறது.

இந்தக் கிருமியானது குடிசன மிருக்கும் உலகத்தின் எப்பகுதிகளிலும் பரவியிருக்கிறது. உஷ்ணதேசங்களிலும் சமசீதளவுஷ்ண தேசங்களிலுந்தான் இது பிரதானமா யிருக்கிறது. இலங்கையில் நூற்றுக்கு எழுபது வீதமானோரில் இப்பூச்சி இருக்கிறது.

வளர்ச்சியடைந்த நாக்குப்பூச்சிகள் மனிதனின் மணிக்குடலி லிருக்கும். அவைகள் நிறத்தில் நாக்குளிப் பூச்சிகளைப்போலிருக்கும். இரண்டு அங்குலம் தொடக்கம் எட்டுஅங்குலம் வரையில் நீளமுள்ளதா யிருக்கும். பருப்பத்தில் ஒரு சிலேற்றுப் பென்சிலளவுசா யிருக்கும். அவைகளுக்குப் பற்கள் கிடையாது. கொழுக்குப் பூச்சிகளைப்போல் அவைகள் இரத்தத்தைக் குடிக்கமாட்டா. ஆனால் அவைகள் மானிடருக்குப் பலவழிகளிற் கெடுதியை உண்டுபண்ணும். ஒருவர் உட்கொள்ளும் தனது சொந்தப் போஷிப்புக்காக ஒருவர் உட்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்.)

## நவராத்திரி.

"எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்" என்றபிரகாரம் சகல ஆன்மகோடிகளையும் இரட்சிக்கும் பேரருட்டு இறைவன் எவ்வகையான திருவடிவங்களோடு விளங்குவனே அவனுடைய திருவருட்சத்தியாகிய ஈசுவரியும் அவ்வகையான திருவடிவங்களோடு விளங்கி ஆன்மகோடிகளுக்கு அருள் புரிவாள்.

"சாயகி நான்முகி நாரா யணிகை
 தளினை பஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை
 சாதி நச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி
 மாதங்கி யென்
றாயகி யாதி யுடையாள் சரணம்
 அரணமக்கே."

எனவும்,

"பைரவி பஞ்சமி பாசாங்குசை பஞ்ச
 பாணி வஞ்சர்
உயிரவி உண்ணு முயர்சண்டி காளி
 ஒளிரும் கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி
 வராகி யென்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள்
 செப்புவரே."

எனவும் ஆன்றோர் கூறியபிரகாரம் உலக மாதாவாகிய ஈசுவரியே இலக்குமிதேவியாகிச் செல்வத்தையும் துர்க்காதேவியாகி வீரத்தையும் வெற்றியையும், சரஸ்வதி தேவியாகிக் கல்வியையும் ஞானத்தையும ஆன்மகோடிகட்கு அருளுவள் இறைவி தம்மை வழிபடும் அடியார்களுக்குச் சகல செல்வங்களையும் நன்மைகளையுந் தந்தருளுவாள் என்பது.

"தனந்தரும் கல்விதரும் ஒருநாளுந்
 தளர் வறியா
மனந்தரும் தெய்வவடிவந்தரும் நெஞ்சில்
 வஞ்ச மில்லா
இனந்தரு நல்லனவெல் லாந்தரும்
 அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி
 கடைக் கண்களே."

என்னும் பெரியார் வாக்கானறியப்படும்.

இந்த மகத்துவங்களெல்லாவற்றோடுங் கூடிய எங்கள் தேவிக்குச் சிறந்த புண்ணியகாலம் இந்த நவராத்திரியேயாகும். இப்புண்ணியகாலம் இமாசலத் தொடக்கம் இலங்கையிறுதியாகவுள்ள இடங்களில் வசிக்கும் சைவநன்மக்களால் இனிது கொண்டாடப்படுவதாம். வட இந்தியாவிலுள்ளவர்கள் இந்தப் புண்ணியகாலத்தைத் தசரா (பத்து இரவு) என்பர்; தென்னிந்தியா இலங்கை சிங்கப்பூர் முதலாம் இடங்களிலுள்ள சைவநன்மக்கள் இதனை நவராத்திரி யெனப் பாராட்டுவர். "இந்நவராத்திரி புண்ணிய காலத்தில் இங்குள்ள சிவாலயங்கள் மடாலயங்கள் சைவ வித்தியாசாலைகள் பரிசுத்தமான கிருகங்கள் ஆதியவற்றிற் பெரும்பாலும் கும்பஸ்தாபனஞ் செய்து விசேஷ பூசை வழிபாடுகள் செய்யப்பட்டு வருவது வழக்கம். பத்துத் தினங்களிலும் இங்ஙனஞ் செய்ய வியலாதவர் மகாநவமியிலன்றாயினும் கும்பஸ்தாபனஞ் செய்து பூசித்து, புத்தகபூசை ஆயுதபூசை முதலியன செய்து, அடுத்த நாளாகிய விஜயதசமியிலன்று வித்தியாரம்பகருமாரம்பங்கள் செய்வர். பிள்ளைகள் உபாத்தியாயர்களுடன் வீடுகள் தோறுஞ் சென்று தம் வித்துவத்திறமையைக் காட்டி உபசரித்துச் சன்மானிக்கப்படுவர். ஆனால் இக்காலத்தில் இவ்வழக்கங்கள் குறையத் தலைப்பட்டுவிட்டன. இவைபோன்ற புராதன சற்கருமங்களை நாம் அலட்சியஞ் செய்வதினூற்றான் மழையின்மை பஞ்சம் தீயசெயல்களென்னுமிவை தலைப்படுகின்றன வென்னும் உண்மையை யுணர்ந்து நவராத்திரி முதலாம் புண்ணிய காலங்களைப் பயபத்தியோடு அநுஷ்டித்து வரல் வேண்டும்.

---

தியசிவனடியவர்களை நடுக்கும்படி கோபித்தவர்களும், முழுப் பொய் பேசுகின்றவர்களும், ஒருவர் நம்பிக்கைக்கு வைத்த அடைக்கலப் பொருளை அபகரித்தவர்களும் ஆகிய இவர்கள் கொடிய நரகத்தில் வீழ்ந்து வருந்துவர். மயிலேறி விளையாடு குகனே புல்வயல் நீடுமலைமேவு குமரேசனே எ-று.

## பொன்மழை பொழிக.

பல நாளாகக் காத்திருந்த மழை சென்ற வெள்ளிக்கிழமை யிரவு இங்கே பெய்தது; இந்த மழை மழையில்லாமல் வாடிய பயிர்கள் மரஞ்செடி கொடிகள் முதலானவை யெல்லாம் குளிர்ச்சியடைந்தன; மாநிலங் குளிர்ந்தது; கமக்காரர் உள்ளம் பூரித்தனர்; இதுகாறும் வயல் விதையாது மழையை ஆவலோடு எதிர்பார்த்திருந்த கமக்காரர் பலர் விதைப்புத் தொடங்கி விட்டனர். புழுதிமயமாய்க் காணப்பட்ட நிலத்திற் சிறிது பச்சை வரும்புகின்றது; ஆனால் இந்த மழை குடிக்கத்தானும் தண்ணீரின்றிக் கஷ்டப்படும் தீவுப் பகுதிகளிற் பெய்யவில்லையென அறியலானோம்; இன்று காலையிலும் இங்கே சிறுமழை பெய்தது.

## நயினார்தீவிற் சாதிப்பிணக்கு.

நயினார்தீவிலுள்ள வேளாளருக்கும் திமிலருக்கு மிடையே ஏதோ மனஸ்தாபங் காரணமாகப் பிணக்கெழுந்துவிட, திமிலர் வேளாளருக்கு வள்ளம் விடுவதில்லையென மறுக்க, வேளாளர் அவர்களுடைய வண்ணார் அம்பட்டரை மறிக்க திமிலர் யாழ்ப்பாணம் வந்து வண்ணார்பண்ணை நீராவியடி ஸ்ரீ அ. தில்லையம்பலமவர்கட்கு முறையிட்டனர். நேற்றுக்காலை, யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை, சைவ வித்தியா சங்கம் என்னும் இரு சைவ ஸ்தாபனங்களின் அங்கத்தவர்களாகிய கௌரவ ஸ்ரீ வை. துரைசுவாமி ஸ்ரீ அ. தில்லையம்பலம் ஸ்ரீ மு சி இராசரத்தினம், பிறக்றர் ஸ்ரீ சி. கந்தையா, பிறக்றர் ஸ்ரீ க. ஐயாத்துரை, இந்துசாதன மனேஜர் ஸ்ரீ ச. அம்பிகைபாகன், பிறக்றர் ஸ்ரீ A. V. ராசையா, பிறக்றர் ஸ்ரீ H. R அரியகுட்டி, சங்குவியாபாரம ஸ்ரீ செல்லப்பா ஆகிய இவர்கள் எல்லாரும நயினார்தீவிற்குச் சென்று அங்குள்ள இரு பகுதியாருடனும் கலந்து பேசி விஷயங்களை ஆராய்ந்தறிந்து வேளாளர் திமிலர் எனுமிரு பகுதியாரையும் தொன்மைபோல் ஒற்றுமையாக வாழ்வதற்கான சமாதான ஒழுங்குகளைச் செய்து வந்திருக்கின்றனர்.

## மஹோற்சவம்.

புத்தள நகரில் எழுந்தருளியிருக்கும் சர்வாபீஷ்டவரத முத்துமாரி அம்பிகைக்கு நிகழும் விபவஞு புரட்டாதிமீ உகவ (14-10-28) முதல் ஐப்பசிமீ எவ (23-10-28 வரை நவராத்திரி மஹோற்சவம் நடைபெறும். கடித.

## தவறணையை ஒழித்தல்.

சலாபத்தைச்சார்ந்த உடப்பிலுள்ள சைவநன்மக்களின்முயற்சியினால் இவ்வூரிலுள்ள சாராயத் தவறணைகள் இரண்டும் இந்த மாதம் 1உ தொடக்கம் நீக்கப்படலாயிற்று என்பதைத் தங்களுக்கு அறியத்தருகின்றேன். கடித.

## தேசாதிபதி.

இலங்கைத்தேசாதிபதியவர்கள் மாலைதீவிலிருந்து கொழும்பு வந்தபின், மட்டக்களப்புப் புகைரதவீதியிலுள்ள கல்லடிப் பெரும்பாலத்தைத் திறந்து வைக்கச்சென்று மீண்டனர். இந்தக்கொண்டாட்டம் அக்டோபர்மீ 9உ நடந்தது. விரைவிற் திருக்கோணமலைக்குஞ் செல்வார். அங்கு அவரை வரவேற்பதற்குப் பெரும் ஆயத்தங்கள் நடக்கின்றன.

## சங்கராச்சாரியாருக்குப் புத்தி சுவாதீனமில்லை.

சிருங்கேரி மடத்து சங்கராச்சாரியாருக்குப் புத்தி சுவாதீனமில்லையென மேற்படி மடம் காரியஸ்தர் அறிவிக்கிறார். ஐந்து வருடங்களுக்கு முன்னும் அவருக்கு இப்படி யிருந்ததென்றும், கூடிய சீக்கிரம் குணப்பட்டுவிடுமென்றும் கூறப்படுகிறது.

## 7 வயதுச் சிறுவனின் தீரம்.

செப்டம்பர்மீ 24உ ஹூக்ளிநதியில் அகில இந்திய நீந்தற்போட்டி நடைபெற்றது. பதினைந்துபேர் இதிற் கலந்துகொண்டனரெனினும், பதின்மரே மறு எல்லையை அடைந்தனராம். இதில் காசியிலுள்ள ஒரு ஏழுவயதுச் சிறுவனும் கலந்துகொண்டானாம். பாதி தூரம் வரை அவன் நீந்தினனென்றும், அதற்காக அவனுக்கு விசேடபரிசு கொடுக்கப்பட்டதென்றும், சென்றவருடத்தை ஜெயித்த ஞானசந்திரசட்டர்ஜியே இவ்வருடமும் போட்டியில் வெற்றி பெற்றாரென்றும், கல்கத்தா செய்தி கூறுகிறது.

## பால் சுரக்கும் ஆட்டுக்கடா.

கல்கத்தா மிருகக்காட்சிச்சாலையில் விநோதமான ஆட்டுக்கடா ஒன்றிருக்கிறதாம். மறி ஆட்டைப்போல இது பால்சுரப்பதால் ஏராளமான ஜனங்கள் இதைப்பார்த்து வருகின்றனராம்.

## ஆப்கானிஸ்தானில் அரசியல் முறை.

ஆப்கன் மன்னர் மேனாட்டு யாத்திரையின் பயனாக அரசாங்கத்தில் ஜனப்பொறுப்பு ஏற்படுமாறு சில மாறுதல்கள் செய்ய மந்திரிமார்களுடன் யோசித்து வந்ததின் முடிவாக, ஒரு மந்திராலோசனைச் சபை ஏற்படுத்துவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று காபூல் பத்திரிகையொன்று கூறுகிறது. அச்சுச் சட்ட விஷயமாய் அதிகாரிகளுக்குள் அபிப்பிராயபேதம் இருந்துவருகிறதாம். சிலர் பத்திரிகைகளுக்குப் பூரண சுதந்தரம் இருக்கவேண்டு மென்கின்றனர் என்றும, சிலர் நிபந்தனை சில இருக்க வேண்டுமெனகின்றார் என்றும் தெரிகிறது.

## தமிழ் ஆசிரியர் பரீக்ஷையிற் சித்திபெற்றோர்.

1928-ஆடு ஆகஸ்ட்மீ நடந்த தமிழ் ஆசிரியர்ப்பரீக்ஷையில் சித்தி பெற்றவர்களுடைய நாமங்கள் வருமாறு:—

கோப்பாய்
அரசினர் ஆசிரிய வித்தியாசாலை.

(1) K. மாணிக்கம், (2) K. ஆறுமுகம், (3) K சந்திரசேகரம், (4) A. செல்லையா, (5) P. செல்லத்துரை, (6) E. S. கணபதிப்பிள்ளை, (7) S. கணபதிப்பிள்ளை, (8) K கந்தப்பு, (9) A. கார்த்திகேசு, (10) S. கதிரவேலு, (11) P. கிருஷ்ணபிள்ளை, (12) S. குமாரசுவாமி, (13) V. மாணிக்கம், (14) S. முருகேசு, (15) N. S. முருகேசு, (16) S. முத்துவேலு, (17) S. K. நடராசா, (18) S. நல்லையா, (19) A. பொன்னையா, (20) S. பொன்னுத்துரை, (21) S. இராசையா, (22) S. சபாபதி, (23) P. சதாசிவஐயர், (24) A. K. சின்னத்தம்பி, (25) V. சின்னத்தம்பி, (26) K. A. சின்னத்தம்பி, (27) K. சிவகுரு, (28) K. தம்பாபிள்ளை, (29) K. தம்பிப்பிள்ளை, (30) S. தங்கராசா, (31) A. வேலுப்பிள்ளை, (32) S. விசுவலிங்கம், (33) K. V. சின்னத்தம்பி, (34) T. V. சங்கரப்பிள்ளை, (35) T. சுப்பிரமணியஐயர்.

ஷை கல்லூரியில் நிபந்தனைத் தராதரப் (Provisional Certificate) பெற்றவர்கள்.

(1) K. நாகநாதர், (2) K. செல்லத்துரை, (3) R. தம்பு.

## ஐப்பசிமாச விசேஷதினங்கள்.

| | | |
|---|---|---|
| ௩உ | (19-10-28) | வெள்ளிக்கிழமை ஐபடிகள் காடவகோனய னார் குருபூசை. |
| ௬உ | (22-10-28) | திங்கட்கிழமை, மகாநவமி, சரஸ்வதிபூசை. |
| ௭உ | (23-10-28) | செவ்வாய்க்கிழமை, விஜயதசமி. |
| ௰உ | (26-10-28) | வெள்ளிக்கிழமை, பிரதோஷம். |
| ௰௨உ | (28-10-28) | ஞாயிற்றுக்கிழமை, பூரணை விரதம், திருமூல நாயனார் குரு பூசை. |
| ௰௩உ | (29-10-28) | திங்கட்கிழமை, பரணி விரதம்; நெடுமாற நாயனார் குருபூசை. |
| ௰௪உ | (30-10-28) | செவ்வாய்க்கிழமை, கார்த்திகை விரதம்; இடங்கழி நாயனார் குருபூசை. |
| ௰௯உ | (4-11-28) | ஞாயிற்றுக்கிழமை, சத்தி நாயனார் குரு பூசை. |
| உ௪உ | (9-11-28) | வெள்ளிக்கிழமை, பிரதோஷம். |
| உ௬உ | (11-11-28) | ஞாயிற்றுக்கிழமை, நரக சதுர்த்தசி ஸ்நானம் (தீபாவலி) மெய்கண்ட தேவர் குரு பூசை. |
| உ௭உ | (12-11-28) | திங்கட்கிழமை, அமாவாசை விரதம், சூரிய கிரகணம். |
| உ௮உ | (13-11-28) | செவ்வாய்க்கிழமை, பூசலார் நாயனார் குருபூசை. |

## மலாய் புங்குடுதீவு ஐக்கிய சங்கம் கோலாலம்பூர்.

மேற்படி சங்கத்தின் எட்டாமயனுத்த விழா விபவஞு புரட்டாதிமீ 15உ (30-9-28) ஞாயிற்றுக்கிழமை சாயந்தரம் நாலுமணியளவில், கோலாலம்பூர் விவேகானந்த ஆச்சிரம மண்டபத்தில் கூடிற்று ஐம்பது அங்கத்தினரளவில் சமுகமாயிருந்தனர். சங்க அக்கிராசனர் திரு மு. பசுபதிப்பிள்ளை அவர்கள் தலைமைவகிக்க பிரம்மஸ்ரீ கா. சாமிநாதக்குருக்களது தேவாரபாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமாயது.

எழாமயனப் பொதுக்கூட்ட வரலாறு, எட்டாமயன அறிக்கை வரவு செலவுக்கணக்கு விபரங்கள் முதலியன வாசித்தங்கீகரிக்கப்பட்டவுடன், வருமயனத்திற்கு ஆகிய உத்தியோகஸ்தர் நியமனம் பெற்றனர்.

புங்குடுதீவு கிழக்கில் தற்போது புதிதாய் வைக்கப்பட்டிருக்கும் ஸ்ரீசண்முகநாதன் வித்தியாசாலைக்கு அரசினர் நன்கொடை கிடைக்கும் வரையும் ஓர் உதவி ஆசிரியனது வேதனம் இச்சங்கம் கொடுத்துதவிவர வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

வேலணையைச்ஜெனனஸ்தானமாக்கொண்டவரும் புங்குடுதீவிலே சென்ற 18 வருஷ காலமாக ஆசிரியனுக் கடமை பார்த்து, சைவசமய அறிவையும், ஒழுக்க வழக்கங்களையும் சிறுவர் சிறுமிகளுக்கு ஊட்டிவந்தவருமாகிய திரு கா. சபாபதிப்பிள்ளை யவர்கள் வயது முதிர்ந்த காரணம் பற்றித் தற்சமயம் இளைப்பாறியிருக்கிறபடியால் அவர் இதுகாறும் சம்முகவர்கட்குச் செய்து வந்த பேருதவிக்காக நன்றி கூர்ந்து நூறு ரூபாய்க்குக் குறையாத பெறுமதியுள்ள ஓர் வெளிநிகளும் பரிசளிக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

இவை நிறைவேறியதும் சின்னான் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிகோவில் பிரதமகுரு பிரம்மஸ்ரீ கா. சாமிநாதக்குருக்கள் அவர்களால் "தேசமுன்னேற்றம் என்னும் விஷயமாக ஓர் சொற்பொழிவு செய்யப்பட்டது அங்கத்தினர் பலர் குறிப்புரை கூறியபின் கூட்டம் 9 மணியளவில் தேவார பாராயணத்துடன் நிறைவேறியது.

—நடித.

## சைவபேதம்.

அரியசதாசிவனென்போ னாதிசைவனவன்பா
 லவதரித்தசிவமறையோ ராதிசைவரிவர்பால்
உரியசிவதீக்ஷைபெற்ற பூசாமாசைவ
 ருயர்ந்தவாசன்வணிக னநுசைவராவார்
பெரியகுலனொப்புயத்தோ னவாந்தரசைவன்சீர்
 பெறுசவன்னனுதியநுலோமர்பிரவரராம்
விரியவனிதிசையொழிந்தோரந்தியசைவத்
 தோர், விரிந்திடுமேழ்சைவ விதமிவையென
 [நூல்விளம்பும்.

என்னும் பிரமாணப்படி ஆதிசைவர் சதாசிவமூர்த்தியாம் சதாசிவ மூர்த்தியுடைய சத்தியோசாதம் வாமதேவம் அகோரம் தற்புருடம் ஈசானம் என்னும் ஐந்து முகத்தினின்றும் தோன்றிய கௌசிகர், காசிபர், பாரத்துவாசர், கௌதமர் அகத்தியரென்றும் பஞ்சருஷி கோத்திரத்திலே ஜனித்த சிவப்பிராமணர்களே ஆதிசைவராம். மகா சைவராவார் பிரமா முகத்திற்றோன்றிய வைதிகப் பிராமணருள்ளே சிவதீட்சை பெற்றவர். அநுசைவராவார் சிவதீட்சை பெற்ற க்ஷத்திரியரும் வைசியரும். அவாந்தர சைவராவார் சிவதீட்சை பெற்ற சூத்திரர். பிரவரசைவராவர் சிவதீட்சை பெற்ற அநுலோமர் அந்திய சைவராவார் சிவதீட்சை பெற்ற மற்றையோர்களாம். இதன் உண்மையையறியாது கௌசிக கோத்திரமுடையார் இரண்டாம் வருணத்தவர்களாகிய க்ஷத்திரியருடைய கோத்திரமாகும் அவர்கள் பரார்த்த பூசைக்குரியவர்களல்லவென்று வாதாடுபவருக்கென் செய்வது.

"சிவன்முகத்திலேசெனித்தவிப்ரசைவ
 ரிவரே யருச்சனைக் கென்றென்"

என்னுங் குறளின் கருத்தையு மறிந்திலர் போலும். ஆதிசைவருள்ளும் சமயதீட்சை விசேஷதீட்சை நிருவாணதீட்சை ஆசாரியாபிஷேகம் என்னும் நான்கும்பெற்றவரே பரார்த்த லிங்கபூசைக்குரியவர்களாம். பிரமாமுகத்திற்றோன்றிய வைதிகப் பிராமணர்கள் சிவதீட்சை பெற்றுக்கொண்டாலும் பரார்த்தலிங்கத்தைத் தொட்டாலும் பிராயச்சித்தம் சொல்லப்பட்டிருக்கிறது அது "வைதிகர் பெறினுஞ் சைவதீக்கையை வாய்க்கவேதன் - கையினும் பரார்த்தலிங்கந் தீண்டுதல் கடனன்று-வையகந் தனக்கு நாசம்வரு மிவர்தீண்டிற் சுத்த-சைவராற் பரிகாரத்தைப் புரிக நூல் சாற்றுமாற்றால். என்னுஞ் செய்யுளாலு மறியக்கிடக்கின்றது.

அருச்சிக்கவிட்டலிங்கமந்தணர்மூன்னுல்வ
 ருசித்தேயநுலோமர்க்கும்.

இ-ள். பிராமணர் முதலிய நால்வரும் இட்டலிங்கத்தைப் பூசிக்கக் கடவர்கள்; அப்பூசை அநுலோமர்களுக்கும் உரித்தாகும் என்பதாம்.

பிரதிலோமருக்கு. ஆசாரியனிடத்தே தங்கள் தங்களுக்குரிய தீட்சை பெற்று அவன் கற்பித்தபடியே பிரதட்சண நமஸ்காரம் பண்ணிக்கொண்டிருப்பதே, சிவபூசையென வறிக.

கௌசிக கோத்திரமுடையார் சதாசிவமூர்த்தியினுடைய ஐந்து முகத்தினின்றும் தோன்றிய சிவப்பிராமணர்களாகிய ஆதிசைவர்கள் என்பதை அறிந்து அடங்கக்கடவர்கள்.

ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள்,
அம்மன்கோவில்,
சுதுமலை.

## வதிரி தேவரையாளிச் சைவ கலைஞான சபையும் தேவசந்நிதானத்திற் பலிநீக்கமும்.

இந்துசாதன பத்திராசிரியரவர்களுக்கு:

ஐயா,

நிகழும் விபவஞு புரட்டாதிமீ ௨0௨ (5-10-28) வெள்ளிக்கிழமை இரவு வதிரி பூவற்கரை அண்ணமார் ஆலயத்திற் சைவாசாரப்படி மிகப் பரிசுத்தமாக வேள்வி நடைபெற்றது. இவ்வாலயத்திற் சென்ற வருடம் நடைபெற்ற வேள்வியிலே, முன் வழக்கம்போல வெட்டிப் பலியிடக் கொண்டுவந்த ஆடுகோழிகளை மேற்படி சபையார் வெட்டாது தடுத்து அவைகளின் உயிரை மீட்டனர் எனச் சென்ற கூ-ம் புத்தகம் ௨௪-ம் இலக்கத்தைக் கொண்ட இப்பத்திரிகை மார்க்கமாக அபிமானிகள் படித்திருக்கக்கூடும்.

ஆனாலும் இவ்வருடம் சில அறிவீனர்களாலும் ஐயமுறுவர்களாலும் 'இக்கோயிலில் நிச்சயம் ஆடுகோழிகள் வெட்டப்படுமென்றும், ஆடுகோழிகள் வெட்டாததும் ஒரு வேள்வியா' வென்றும் வதந்திகள் பரவப்பட்டன. ஒற்றுமையினமும் அஞ்ஞானமும் மீண்டும் இவ்வாலயத்தை அசுசிப்படுத்துமா எனச் சிலருக்கு ஐயம் உதித்தது. இருந்தும் எம்மிறைவன் சபையாரது ஆசைகளைப் பூர்த்திபண்ணினார். அவர்களுடையநெஞ்சம் ஆனந்தசாகரத்திலேமூழ்கின.

இன்னும், இவ்வேள்வி குறித்த வெள்ளிக்கிழமை இரவு செய்யவேண்டிய கிரியைகள் யாவும் முற்றுவித்துச் சனிக்கிழமை பகலிலே, நிவேதனப் பொருள்களாய அமுது,பழம்,பாக்கு,வெற்றிலை, இளநீர் முதலியவைகளோடு கிரகசாந்தியின் பொருட்டு வழிவெட்டிவிடு மிடத்துக்கு மாமிசம் வெறுத்த மாணவ அடியார்களாலும் சைவ அடியார்களாலும் கோளறுபதிகம்பாடப்பட்டுச் செல்ல ஏனைய அடியார்கள் ஒவ்வோர் திருப்பாட்டின் ஈற்றிலும் "அரோகரா" எனக் கோஷித்துச் செல்ல எவ்வகைசந்தடியுமில்லாத பேரானந்தத்தோடு வேள்வி நிறைவெய்தியது.

பின்னர் ஆலய தரிசனைக்கு வந்த அடியார் அனைவருக்கும் விபூதி, சந்தனம், பத்திரபுட்பம் முதலிய பிரசாதங்கள் வழங்கப்பட்டன. இலக்கணமாக இவ்வாலயத்தில் ஆடுகோழிகளைக் கொலைசெய்யுந் தாக்கிருத்தியத்தைச் சென்ற வருடம் தடுத்துவிட்டமையைக் குறித்து இக்கோயிலின் வேள்வித்தினத்திலே இறைச்சியை மலிவாக வாங்கி வயிறுவீக்கப் புசிக்க நப்பிவிருந்தபக்திமான்களும் ஆலயத்தைச்சாட்டித் தாம் வளர்த்த ஆட்டை வெட்டி அதன் இறைச்சியைத் தமக்கு ஊட்டும் ஆட்டினும் இழிந்த அறிவின பக்தர்களும், "அண்ணமார் உண்டானால் ஆடுகோழிகளை வெட்டாது தடுத்த இவர்களுக்கு வருகிற வேள்விக்கிடையில் ஏதுங் காட்டி வைக்கவேண்டு"மென ஒரு நேர்த்திக்கடன் செய்திருந்தனர். (இதிற் குறிப்பிடத்தக்கது; ஒருவருக்கு வருகின்ற நன்மை தீமை பிராரப்த வினைப்பயன் என்றறியாத இவர்கள் என்ன இடர் வந்தாலும் அண்ணமாருக்கு ஆடுவெட்டவிடாத குறைபாடெனச் சொல்ல இருந்தார்கள். ஆயினும் தடுத்த அவர்களுக்குத் தெய்வீகமாகத் தடிமற்சுரமாகுதல் காணப்படவில்லை.) இவ்வருஷம் வேள்விச் செலவுக்குக் காசு அறவிடச் சென்ற இருவரை நோக்கி ஒருவர் "ஆடுகோழி வெட்டவிடாது தடுத்த அநியாதகர்களுக்கு அண்ணமார் வருநாளுக் கிடையில் ஏதுங் காட்டுவர்" என்று திருவாய்மலர்ந்தருளினராம். இங்ஙனங் கூறிய அவருக்கே அன்று ஏதோ இடர் நேர்ந்தமையால் வேள்வியன்று ஆலயத்துக்கு யாவர்க்குமுன் பாற்பொங்கலுக்காயத்தமாக வந்து வேள்வி முடியுமட்டும் ஆவலுடன் ஆலயத்தொண்டாற்றினார்.

மேலும், இவ்வாலயத்துக் கயற்கிராமங்களிலுள்ள சில கோயில்களிலும் ஆடுகோழிகளை அலறத் துடிக்க வெட்டாது தடுக்கும் மார்க்கத்தைச் சொன்ன எங்களுக்கு அவ்வறிவீனர்கள் சொன்ன மறுமொழிகளாவன:— "பண்டுதொட்டுப் பரவணியாகத் தெய்வத்துக்குக்கொடுத்த உபயத்தை மாற்றிவிடில் எங்களுக்குக் கேடுவரும்" என்றும், "பருத்தித்துறை வரும்பராய் சுன்னாகம் அளவெட்டி முதலிய இடங்களிலுள்ள—சைவப்பழக்கள்—பூசைசெய்கின்ற-உயர்ந்த.........சாதியார் வணங்குகின்ற பண்டாரியம்மன்,காட்டுவைரவர்,நயினார் முதலிய தெய்வஸ்தலங்களிலே ஆயிரக் கணக்கான ஆடு கோழிகளைப் (புலையரல்லாதஅவர்கள்) வெட்டிப் பலியிடுகிறார்களெனவும், இவைகளை யெல்லாஞ் செய்வது சைவ மேல்சாதியாரெனவும், பள்ளராகிய எங்களுக்குத் தானோ சைவப்பெருக்கும் பாவமும் தலைகட்டியதெனவும் அலட்சியம்பண்ணிப் பரிகசித்தனர். இம் மகாபாதகமாகிய புலைத்தொழிலை ஆலய சந்நிதானத்திற் செய்வது அநீதியென்றும் சைவாசார விரோதமென்றும் எடுத்துரைக்குமிடத்துப் பண்டாரியம்மன், காட்டுவைரவர், நயினார்கோவில்களைத் திருட்டாந்தமாக எடுத்துக்காட்டி அவர்கள் புலையர்களாவென்றும் அவர்களுக்குச் சைவமுறையான நீதிநூல் இல்லையாவென்றும் எம்போன்றோரைக் குறுக்குக்கேள்வி கேட்கிறார்கள். இவ்வினாக்களுக்குத் தங்கள்பத்திரிகையே இடிந்து விடையிறுக்கத்தக்கதெனவெண்ணி நாம் மௌனஞ் சாதித்து, சாதியிற் குறைந்தவர்களெனச் சொல்லப்படும் எம்மவர்களாகுதல் இம்முறையைக் கைப்பற்றியொழுக எங்களுக்கின்னும் இடைவிடாத ஊக்கத்தை அருள்புரியுமாறு சகல சராசரங்களையும் படைத்துக் காத்துத் துடைத்தருளும் ஸ்ரீ பரப்பிரமர் அவனை யெனத் துதிக்கின்றோம்.

இங்ஙனம்,
ஓர் அங்கத்தவன்
வதிரி தேவரையாளிச் சை. வி. சா. சபை.

## சபைப் பழக்கம்.

எக்காலத்திலும் மாணாக்கனவான் நல்லொழுக்கம் கொள்கை மேன்மையோர் குணங்கள் நிறையப்பெற்ற கல்லாசிரிய ரொருவரை யடுத்து சந்தேக விபரீதங்களின்க அவ்வாசானுரைத்ததனை ஏற்கொள்ளினுங் காற்கூறல்லது பற்றாதவனாவனெனின், தற்காலத்திலே முன்னோர் கூறிய விலக்கணங்களுக் கிலக்கியமாகாத ஆசிரியர் பலரையடுத்தும் நாங்கள் பெறுவது பெரும்பான்மை பொருள் வரவும் சிறுபான்மை சொற்சுவை பொருட்சுவைகளாலாரும் இன்பமும் ஆகிய அவர்தரப் பிரயோசனங்களை மாத்திரம் அடைவிக்குங் கல்வியேயாதலின் எங்கள் கல்வியோ மிகவுஞ் சிறிதென்பது கூறாமலே விளங்கும். தான் கற்ற நூலளவேயாகுமாம் நுண்ணறிவெனவே எங்களறிவுமோ சிறிதினுஞ் சிறிதாயிற்று. சிறிதாயிற்றெனினும், செயற்கை யறிவின்பாற்பட்ட இதனை மக்களாகிய வெங்களுக்கு இயற்கையே யமைந்தனதாகிய விலங்கினங்கட்கில்லா விசேடப் பகுத்தறிவோடு சேர்த்து விருத்திசெய்ய முயலுவோமாயின் அறிவெனப்படுவது சிறிதாயினும் விளக்கமுறு மென்பது திண்ணம்.

அறிவு விளக்கமுறுவதற் கின்றியமையாத் துணையாயிருக்குஞ் சாதனங்களு ளொன்று அறிவின் பயனாகிய ஒழுக்கத்தைக் கைவிடாதிருப்பதற்கேற்றபழக்கங்களைக்கைக்கொள்ளுதலாம். பழக்க ஒழுக்கங்களில்லாவிடத்துக் கல்வியும் அதன் பயனாகிய அறிவும் விளக்கமுறமாட்டாவாதலின் எங்களுக் கத்தியாவசியம் வேண்டப்படும் பழக்க ஒழுக்கங்களைவையென நாங்களாராய்ந் தறிந்தொழுக வேண்டும்.

அவ்வாறாராய்ந்தறிதவற்றுள், வயது முதிர்ந்தபின் கேடுற்றுப் பெரியோராலிகழப்பட்டு வெறுக்கப்படும்பொழுது கைக்கொள்ளுவதற்குக் கஷ்டமாகத் தோன்றுவனவும் சிறுவயதிலேயே கைக்கொள்ளுமிடத்து யாவருக்கும் எவ்விடத்தும் எக்காலும் பெரும் பயன் அளிக்க வல்லனவும் ஆகிய சிலவற்றை ஈண்டுச் சிறுவர் பொருட்டுக் குறிப்போம். [சிறுவர் பொருட்டுக் குறிப்பதேனெனின், தற்காலத்திலே வித்தியாசாலைகளிலே குருசிஷ்ய முறையருகி ஆசிரியர் பலரிடம், "வகுப்பிலிருக்கும் போது மாத்திரம் உபாத்தியாயரும் மாணவரும்; மற்றும் வேளைகளிலெல்லோரும் தோழர் சினேகிதரல்லவோ" என்னும் நவீன கொள்கைகள் பாவிவருதலினாலே, மாணாக்கர் வழிபடல் முனிந்தும், குணத்தோடு பழகுதலற்றும், அழிவினவழுவா தஞ்சவேண்டிய விடத்து அச்சஞ் சிறிதுமின்றி நீரெனச் சேர்ந்தும் நற்பழக்கங்களை இளமையிலேயே பழகாமையினாலே வயது முதிர்ந்து ஜீவனத்தின் பொருட்டுப் பிரதேச சஞ்சாரஞ் செய்யும் பொழுது பிறரவமதிப்பும், சுயமரியாதையிழப்பும், தங்கள் சாதியத்தாருக்குஞ் சமயத்துக்கும் இகழ்ச்சியுமே தேடிக் கொள்ளுகின்றார்களாதலினென்க.]

தக்கோனெனத் திரியவிரும்பு மொருவன் முதலிலே "சேரிட மறிந்து சேர்" என்னும் ஔவைப்பிராட்டியாருடைய திவ்விய வாக்கை மனதிற்கொண்டு தக்கோரினத் திருத்தல் வேண்டும். தக்கோரினமுமோ பிரபுக்களென வித்துவான்களென ஞானிகளெனப் பல திறத்தினரையு முள்ளடக்கிய தொன்றாகலின், இவர்களுட் பலரோடுஞ் சிலரோடும் ஒருவரோடும் உள்ள சங்கமே பெரிதும் விரும்பற்பாலது. இவர்களால் மதிக்கப்படுவதே பெருஞ் சிறப்பாகும். ஆதலின் நற் சங்கங்களைத் தெரிந்து நாடிக்கொள்ளல் வேண்டும். நாடியடைந்த பின் அவ்விடத்திலே யாதுசெய்ய வேண்டுமெனச் சிறிது கவனிப்போம்.

ஒரு சங்கத்தை யடைந்தால் அவ்விடத்திலுள்ளோரனைவரும் தன்னிலும் பெரியோரென வுணர்ந்து தாழ்மை, அடக்கம் மரியாதை முதலிய குணங்களோடு கூடியவனாய் உட்கார வேண்டும். உட்கார்ந்திருக்கும் பொழுது தனக்குள்ளேயே பாடிக்கொள்ளுதல், கைவிரல்களாலும் கால்களாலும் தாளம்போடுதல், கால்களை ஆட்டுதல், தொழுநோடு பரிஹாஸ வார்த்தையாடல், நகங்களைக் கடித்தல், உரத்துச் சிரித்தல், செருமுதல், பிறருக் கருவருப்புண்டாகும்படி கொட்டாவி விடுதல், உமிழ்தல் எச்சில்படப் பேசுதல், சுருட்டுப் புகைத்தல் முதலிய கெட்ட வழக்கங்கள் அணுகாவண்ணம் மிகவுஞ் சாவதானமாக விருத்தல் வேண்டும்.

சபையிலொருவர் பேசும்பொழுது சித்திரப் பாவையி னத்தகவடங்கிப் பேசுகிறவருடைய முகத்தையே பார்த்துக்கொள்ள வேண்டும். அவர் சொல்வதை நாம் கவனியாமல் மூக்கை நோண்டுவதும் காதைக் குடைவதும் உயரப் பார்க்கிறதுமாக விருந்தால் அவருக்கு அவமானஞ் செய்வதாக முடியும். அவர் பேசும் விஷயத்தில் நமக்கு விருப்பமில்லாவிடினும் மரியாதையாய்க் காது கொடுத்துக் கேட்க வேண்டுமேயன்றிப் பேச்சு மத்தியிலெழுந்து போவதனாலாவது வேறெவ்வித செய்கையினாலாவது நமது வெறுப்புத் தோன்றும்படி நடந்தால், விஷயத்தைச் சிரத்தையோடு பேசுகிறவருக்கும் விருப்போடு செவிசாய்த்துக் கேட்கும் பெரியோருக்கும் அவமரியாதை செய்தவர்களாவோம்.

அன்றியும், பிறனொருவர் பேசும்பொழுது நாம் வாய்க்குள் முணுமுணுத்தேனும் வேறு விதமான சப்தங்களை ஆரம்பித்தேனும் அவருடைய பேச்சைத் தடுக்கலாகாது. யாதாயினும் பேசவேண்டி யிருந்தால், அவர் பேசி முடிந்தபின்பு மறுத்துரைக்க வேண்டியவைகளைச் சாந்தமாய் மரியாதையுடன் மறுத்து, தர்க்கங்களையும் பரிஹாசப் பேச்சுகளையும் தற்புகழ்ச்சியையும் வீண் சந்தேக விரோத சச்சரவுகளையுண்டாக்கும் பேச்சுகளையும் நீக்கிப் பேசல் வேண்டும். ஆனால், தர்க்க முதலியவற்றை நீக்க வேண்டுமெனக் கூறினோமெனினும், எங்கள் சமயம், பாஷை, தேசம், பழக்கவழக்கங்கள், முன்னேற்றம் முதலியவைகளுக்கு முரண்பாடான வார்த்தைகள் எங்கள் செவியிற் படுமாயின் நாங்கள் மிகவும் விழிப்பாகவிருந்து அஞ்சாது பேசவேண்டியனவற்றை அபிமானத்துடன் கூறி உண்மையை ஸ்தாபிக்கு முயற்சியில் ஒருபொழுதுஞ் சோர்வடைதல் கூடாது.

சபையிலிருக்கும் பொழுது சிரிப்பு விளையாட்டுகளை நீக்க முயன்று கடுகடுத்த முகத்துடனிருத்தலுங் கூடாது. முகத்திலே சந்தோஷமும் சுயமரியாதைக் கேற்ற பெருமையுந் தோன்றவிருத்தல் வேண்டும்.

சிற்றுணவுகளும் பானவகைகளும் வழங்குஞ் சபைகளிலிருக்க நேரிட்டால், உணவுகளைக் கொள்ளும்பொழுது எச்சிற் படுத்தாதுண்பனவற்றை எச்சிற்படுத்தி யுண்ணல், உண்ட சேஷத்தைப் பிறர்மீதெறிதல் முதலிய செயல்களினாலே மனுஷராக விருந்தோர் சடுதியிலே குரங்குக்குட்டிகளாகவும் நாய்க்குட்டிகளாகவும் மாறிவிடுதலுங் கூடாது.

போசன சபைகளிலிருக்க நேரிட்டால், சாப்பிடும்பொழுது ஆடாமலும், அசையாமலும், வீண்வார்த்தை பேசாமலும், விரும்பிய பதார்த்தங்களைப் பிறர் நகைக்கும்படி மீட்டும் மீட்டுக் கேளாமலும், இடையிடையே சலபானம் பண்ணாமலும் சாப்பிட வேண்டும். பதார்த்தங்களை மோந்துபார்த்தல்,காறுதல்,இலையோரங்களிலே கோழை யுமிழ்தல் முதலிய அவலக்ஷணமான செயல்களை அறவே நீக்கிக்கொள்ளல்வேண்டும். மற்றவர்களைவிட மந்தமாகவேனும் வேகமாக வேனுஞ் சாப்பிடாமல், அவர்களோடொத்தபடி சாப்பிட வேண்டும்.

இவ்வாறாக எச்சபைகளிலும் மரியாதையுடனிருக்கப் பழகினாற் பெரியோரும் மதிப்பர்; அன்னை தந்தையரும் ஈன்றபொழுதினும் பெரிதுவப்பர்; கல்வியூட்டிய ஆசிரியரும் பெருமையடைவர்; வித்தியாசாலைகளும் கீர்த்தியுறும்; சிறப்புந் தானேவந்தடையும்; வைதிகத்திலும் நன்மையே விளையும். ஆதலினாலே, இத்துணைப் பெரும்பயன்களையெல்லாம் அளிக்கவல்ல நற்பழக்கங்களை இளமையிலேயே யாவரும் பழகுவோமாக.

இதுகாறுங் கூறிய சபைகளெல்லாவற்றினும் பன்மடங்கு பெரியதோர் சபையுளது. அது சொற்பொருள் கடந்ததாகலின் அதனைப்பற்றியறிவதற்கு மௌனநிஷ்டை கைகூடிய ஞானிகளே அதிகாரிகளாவர். முத்திதரும் அத்தெய்வ சபைக்குரிய பழக்கங்களை யுணர்த்துவதற்குச் சபாநாதப் பெருமானே ஆசிரியராவர்.

கண்டி,
9.10-28.

இங்ஙனம்,
சோம. சரவணபவன்.

## அரசாங்க வைத்திய சுகாதாரப்பகுதி வெளியீடு.

—:O:—

(முதலாம்பக்கத் தொடர்ச்சி.)

கொண்ட உணவுகளில் இப்பூச்சிகளும் தங்கள் ஜீவனத்திற்குப் பங்குபற்றுகின்றன. நோய்களிலிருக்கும் விஷக்குறிகளுக்குக் காரணம் இப்பூச்சிகளிலிருந்துவரும் ஒருவிதமான நச்சுப் பதார்த்தம்தான். அவைகள் சிலவேளைகளில் மணிக்குடலைவிட்டு மெல்ல மெல்ல நகர்ந்து வயிற்றுக்குள்ளும் தொண்டையிலும், சுவாசக் குழாய்களிலும், மூக்குத்துவாரங்களிலும்வந்து சேரும். அவைகள் ஒடுக்கமான குழாய்கள் துவாரங்கள் முதலியவைகளுக்குள் நுழைந்து கொள்ளுமனச்சாய்வுள்ளவையாயிருக்கும். இப்படியான குடியெழுச்சிமுக்கியமாய் காய்ச்சற் காலங்களில்தான் அபாயகரமான குணங்களைக் கொண்டுவரும்.

### நாளாந்தம் ஆயிரக்கணக்கான முட்டைகள்.

மலத்துடன் கழிந்துபோகும் முட்டைகளைப் பெண்பூச்சியானது நாளாந்தம் ஆயிரக்கணக்காய் இடும். இம்முட்டைகள் மிகவும் தடித்த ஓடுகளை உடையதும் சுருக்கில் உடைந்துபோகாத எதிர்த்தாக்குசகமுடையன. மலத்தில் அல்லது அழுக்குள்ள ஈரமண்ணில் வெகுகாலம் இம்முட்டைகள் அடைகாக்கப்பட்டுத் தொற்றியல்புடைய முதிர்ந்த பருவத்தை அடையும். பின்பு அவைகளில் சின்னச்சின்னப்புழுக்கள் உள்ளுக்கிருக்கும் மண்ணில் பொரிக்கும் கொழுக்கிப்பூச்சியின் முட்டையைப்போலல்லாமல் கீரைப்பூச்சியின் முட்டை ஓட்டுக்குள்ளிருக்கும் சின்னக் கர்ப்பத்துடன் மானிடதேகத்திற்குள் போய்ச் சேர்ந்தாலேயொழிய மற்றும்படி குஞ்சு பொரிக்காது. கீரைப்பூச்சிகளின் புதிய முட்டைகளை ஒருவர் விழுங்கிவிட நேர்ந்தால் அவைகள் யாதாமொரு மாறுதலு மடையாமல் மறுபடியும் மலத்துடன் வெளியில் வந்துவிடும் நல்லாய் முதிர்பருவமடைந்த முட்டைகள்தான் மானிடதேகத்தில் பொரிக்கும்.

கீரைப்பூச்சியின் தொற்றுநோய்க்குறிகள் மிகவும் அற்பசித்த வேதனை தொடக்கம்வெகுதுயர் வரையிலும் பலவிதமாயிருக்கும். இளம்பூச்சிகளானது குடியெழும்பி அலைந்துலைந்துகொண்டிருக்கும்பொழுது தசையிழையின் தசைநார்க்கட்டுகள் உடைந்து சிலவேளைகளில் சுவாதநோயை உண்டுபண்ணிவிடும். சிலருக்குச் சாப்பாட்டுப் பிரிய மின்மையும், சிலருக்குச் சாப்பாட்டில் அதிகம் ஆவலும், சிலருக்குப் பொருக்குத் தன்மை மாறுபட்டிருத்தலும், இன்னுஞ் சிலருக்கு வயிற்றுவலியும், சித்திரைப்பக்கமும், வயிற்றுக்குழப்பம்முதலிய இக்குணங்களும் பூச்சிக் குழப்படியால் உண்டுபடும். இதனால் சிலவேளைகளில் பிள்ளைகள் மிகவும் வெருவெருப் படைந்துவிடவும், மெலிவடைந்துவிடவும், திட்டமாய்த் தலையெடுக்க விடாதும் பண்ணிப்போடும். இப்பூச்சிகள் சிலவேளைகளில் குடலுக்குள் வந்து அளவிறந்தமாய் வாந்தியுண்டுபட்டு வெளியில் வந்துவிடும். இப்பூச்சிகள் வாய்க்கும் நாசித் துவாரங்களுக்கும் அலைந்து திரியுமாதலால் சிலவேளைகளில் அவைகள் குரல்வளைகளிற் போய்ச் சேர்ந்து திக்குமுக்கடைப்பைக் கொண்டுவந்துவிடும். மூடத்தவமுள்ள சனங்களுக்குச் சிலவேளைகளில் மலச் சிக்கல்களையு முண்டுபண்ணிவிடும். பித்த நாம்புகளில் இப்பூச்சிகள் போய்ச் சேருமாயிருந்தால் செங்கண்மாரி, மஞ்சள் காமாலை முதலிய நோய்களை உண்டுபண்ணிவிடும். அவைகள் குடலின் சுற்றுச்சுவர்களில் புகுந்துகொள்ளுமாயின் அடிவயிற்றிரத்தத்தைமூடிய சவ்வுகளில் நோவையும் (Peritonitis) அடிவயிற்றுச்சுற்றுச்சுவர்களில் புகுந்துகொள்ளுமாயின் சிலர்நி முதலிய நோயையும், "அப்பென்டிக்ஸ்" என்னும் அவயவத்தில் புகுந்துகொள்ளுமாயின் "அப்பென்டிசயிற்றிஸ்" (Appendicitis) என்னும் வயிற்று வலியையு முண்டுபண்ணிவிடும். பிள்ளைகளுக்கு நாம்புவாங்கல், காக்காய் வலி முதலிய நோய்களையு முண்டுபண்ணிவிடும் "மெனிங்கயிற்றிஸ்" (Meningitis) நோயைப்போல் சிலநோய்களும் குறிகளும் இப்பூச்சிக் குழப்படியின் நிமித்தம் சிலவேளைகளில் காணப்படும். ஒரு அணுதரிசினியின் (Microscope) மூலமாய் ஒருவனுடைய மலத்தைச் சோதித்து இப்பூச்சியின் முட்டைகளிருக்கக் கண்டால் அவனுக்குக் கீரைப்பூச்சிக் குழப்படி இருக்கென்று உடனே தெரியும்.

"சீனப்பொடியம்" என்னும் (Oil of Chenopodium) காமாலை நோய் வராமல் தடை பண்ணுகிறதற்குச் செய்யும் சிகிச்சைக்கு உபயோகிப்பது போல் இந்தக் கீரைப்பூச்சிக் குழப்படிக்கும் ஒருமுறை அல்லது இருமுறை சீனப்பொடியம் எண்ணெயைக் கொடுத்து இலேசாய் மாற்றிப் போடலாம். இம்மருந்தை ஒரு வைத்தியரிடம் கேட்டு வாங்கிச் சாப்பிட்டு அவர் சொல்லும் புத்திமதியை அநுசரித்து நடந்துகொள்ள வேண்டும். ஆனால் இந்தச் சிகிச்சையானது மிகவும் சுகமானதும் அபாயகரமுமற்றது.

இந்நோய் கீரைப்பூச்சி முட்டைகளை ஒருவர் தனக்குத் தெரியாமல் உட்கொள்ளுகிறபடியினால் தான் உண்டுபடுகிறது. இம்முட்டைகள் மலங்களில் மாத்திரம் தான் காணப்படும். இவ்வியாதி கண்ணுக்குத் தெரியாத மலத்திலுள்ள மிகவுஞ் சிறிய அணுக்களை உட்கொள்ளுகிறபடியால் தான் உண்டுபடுகிறதென்றும் சரித்திரத்தை இங்கு விபரித்துக் கூறினால் வெறுப்புடையதாயிருக்கும். இரைப்பைக்குட் செல்லும் உணவாகப்பட்டது ஒரு துப்பரவற்றவரால் பலவிதமாய் அசுசியாக்கப் படுவதினால் தான் இந்நோய்தொற்றிப் பரவுகிறது.

(1) ஆறுகளிலிருந்தும், தூசு, கஞ்சல் வத்தை விழவிடாமற் பாதுகாக்கப் படாத கிணறுகள், அருவி யூற்றுகளிலு மிருந்தெடுக்கப்படும் குடிக்க உதவும் தண்ணீர் நோய் அழுக்கடையும்.

(2) அழுக்கடைந்த பூமியில் விடப்படும் அல்லது உண்டாக்கப்படும் பழவகைகள் அல்லது தாவரவர்க்கங்கள் நோய் அழுக்கடையும். மலத்தின் ஒரு மிகச்சிறிய அணுவும் கீரைப்பூச்சியின் முதிர் பருவமடைந்த முட்டைகளும் இந்த உணவுப் பொருட்களில் ஒட்டிக்கொண்டிருக்கும். இப்படியாகப் பட்ட உணவுப் பொருட்கள் துப்புரவான பூமியிலுண்டாக்கப்பட்ட தாயிருந்தால் பயமில்லாமல் அவைகளைச் சாப்பிடலாம். அல்லது அவைகளை வடிவாய்த் துப்புரவு பண்ணிச் சமைத்துச் சாப்பிடலாம்.

(3) கிருமிப் பூச்சியின் முதிர் பருவமடைந்த முட்டைகளுள்ள மலமாகப்பட்டது ஈக்கள் மூலமாய் உணவுப் பதார்த்தங்களுக்குக் கொண்டு போகப்படுகிறது. இந்த ஈக்களானது மலத்தைச் சாப்பிட்டு விட்டுப் பறந்துபோகும் பொழுது தங்கள் கால்களில் இந்த முட்டைகளுள்ள மலத்திற் கொஞ்சத்தைப் பிரட்டிக் கொண்டு போகிறது. அவைகள் உணவுப் பொருட்களில் உட்காரும்பொழுது இந்த முட்டைகளுள்ள மலத்தை அவைகளில் அழையச்செய்து விடுகிறது. இனிப்புக் குழம்பு, சீனி, பால் முதலிய உணவுப் பொருட்களில் இந்த மலத்தை ஈக்கள் கலக்கச்செய்து விடுகிறது.

இந்தப்பூச்சிக் குழப்படிக்கும், பள்ளிக்கூடங்களிலும், காடுகளிலும், தோட்டங்களிலும் காமாலை நோய் வராமல் தடைபண்ண நடத்தப்படும் முயற்சிகளுடன் சேர்ந்துச் சிகிச்சை செய்து மாற்றப்படுகின்றன. காமாலை வியாதியை அடக்கியதுபோல் இக்கீரைப் பூச்சிக் குழப்படியையும் படிப்படியாய்க்குறைத்துக்கொண்டு வரப்படுகிறது. இந்த அழுக்கு நிறைந்த பூச்சியின் கெடுதிகளிலிருந்து விலகிக்கொள்ள வேண்டுமானால் சாதாரணமான சுகாதார விதிகளை ஒவ்வொருவரும் நன்கு கவனித்துக் கொண்டுவரப் பொறுப்பாளிகளாயிருக்க வேண்டும்.

---

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்,
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க,
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க,
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

---

Printed & published by Pandit V. T. Sambandhan for and on behalf of the Proprietors, the Jaffna Saiva Paripalana Sabai, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai.